செ.வெ.எண்: 41 நாள்: 18.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைவரும் சாலை விதிகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துறையின் சார்பில் நடைபெற்ற 28-வது சாலை பாதுகாப்பு வாரவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் சாலை பாதுகாப்பு தலைக்கவச விழிப்புணர்வு குறித்த இருசக்கர பேரணியினை இன்று (18.01.2017) துவக்கி வைத்தார்.

இந்த சாலை பாதுகாப்பு தலைக்கவச விழிப்புணர்வு குறித்த இருசக்கர பேரணியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

தமிழகஅரசு போக்குவரத்துத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகஅரசு போக்குவரத்து துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்தை தடுக்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த சாலை பாதுகாப்பு வாரவிழா கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இந்த ஆண்டிற்கான 28-வது சாலை பாதுகாப்பு வார விழா 17.01.2017 அன்று தமிழகம் முழுவதும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் சாலைப்பாதுகாப்பு தலைக்கவச விழிப்புணர்வு குறித்த பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த சாலை பாதுகாப்பு வாரவிழா 17.01.2017 முதல் 23.01.2017 வரை மாவட்ட முழுவதும் சிறப்பாக கடைபிடிக்கப்பட உள்ளது.

இந்த சாலை பாதுகாப்பு வாரவிழாவில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களிடம் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், இரயில் நிலையம், சந்தைகள், பள்ளி கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் கலைக்குழுக்கள் மற்றும் நாடகக் குழுவினர்களை கொண்டு விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது. சுங்கச்சாவடிகளில் வாகனங்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், விபத்தில்லாமல் வாகனங்களை இயக்குவதற்கு ஒட்டுநர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

மேலும், சாலை பாதுகாப்பு தலைக்கவச விழிப்புணர்வு வாகனப்பேரணி பொதுஅலுவலக வளாகத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேரணியில் கலந்து கொண்டோர் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், ஒலிப்பெருக்கி மூலமும் தலைக்கவசம் அணிவதால் ஏற்படும் பயன்கள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இப்பேரணி பொது அலுவலக வளாகத்தில் தொடங்கி பழைய பேருந்து நிலையம், அண்ணாசிலை, கீழராஜவீதி, பிருந்தாவனம் முக்கம் வழியாக நகர்மன்றத்தை சென்றடைந்தது. இதில் ஆட்டோ, டாக்சி, பேருந்து, லாரி, பள்ளி, கல்லூரி வாகன ஓட்டுநர்கள், இருசக்கர வாகன விற்பனையாளர்கள் உள்ளிட்ட ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், நமது மாவட்டத்தில் உள்ள வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் சாலை விதிகளை உரிய முறையில் பின்பற்றி நடப்பதுடன், உங்கள் பாதுகாப்பே, உங்கள் குடும்ப பாதுகாப்பு, சாலையில் எச்சரிக்கையுடன் சென்று விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பாலகுருநாதன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.இராஜசேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஆர்.கார்த்திக்தொண்டமான், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபு, நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜுவாசுப்பிரமணியன், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திரு.ராமதாஸ், திரு.ஐயப்பன் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள், தொழிலதிபர் திரு.ஜெயக்குமார், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை**